# நல்ல விதை



**தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்.**

மத்தேயு 3:12

விதையானது மண்ணில் விழுந்து செத்தால் ஒழிய, அது பலுகிப்பெருகி, தேவையான பலனைத்தரமுடியாது. ஒரு விவசாயி, தனது தரிசு நிலத்தை பண்படுத்தி, தேவையான சத்துப்பொருட்களையெல்லாம், அந்த நிலத்திலே போட்டு, அதை முதலில் தயார் செய்கிறான். அதன் பிறகு, ஏற்கனவே தனியாகப்பிரித்தெடுத்து வைத்திருக்கும், நல்ல விதைகளை, எடுத்து, அந்தப்பண்படுத்தப்பட்ட நிலத்திலே விதைக்கின்றான். விதைத்தப்பிறகு, அதற்குத்தேவையான நீரையும், மற்ற தாதுப்பொருட்களையும் அளித்து, பயிர்கள் வளரும்படி அதைப்போஷிக்கின்றான். பயிர் வளர்ந்ததும், காவல் காத்து, அறுவடையின்போது, தனது உயிரையும் ஒரு பொருட்டாக மதிக்காமல், இரவிலும் நிலத்தினருகிலேயே உறங்காமலிருந்து, விளைந்த பலனை, களத்திற்கு கொண்டு வருகின்றான்.

தேவன், தமது இராஜ்ஜியத்திலே சேர்த்துக்கொள்ளும் ஒவ்வொரு ஆத்துமாவையும், மேற்கூறிய உவமைக்கு ஒப்பிட்டுக்கூறியிருக்கின்றார். நமது இதயமே அந்த நிலம். அதில் தேவ வசனமாகிய

விதை விதைக்கப்படும் போது, அது பலன்தரும் என்று தேவன் விசுவாசிக்கின்றார், விரும்புகின்றார். அதுமாத்திரமல்ல, விதைக்கப்பட்ட இதயம், பலன் தர தேவையான ஜீவ ஊற்றாகிய பரிசுத்த ஆவியையும் தந்தருளுகிறார். பரிசுத்த ஆவியைப் பெற்ற இருதயம் நல்ல நிலமாக மாறுகின்றது. இப்படி, நல்ல நிலமாகிய இருதயத்திலே வாழும் ஆத்துமாவை, பரலோகத்தின் விதையாக தேவன் உருவாக்குகின்றார். எப்படி ஒரு விதை பூமியிலே விதைக்கப்பட, முதலில் அது பண்படுத்தப்படுகின்றதோ, அதுபோலவே நமது ஆத்துமாவும், பரலோகத்திலே விதைக்கப்பட, முதலில் பண்படுத்தப்படவேண்டும்; அதாவது விதையாக மாற்றப்படவேண்டும்; அதுதான் இரட்சிப்பு. ஏன்?

கோதுமையோ அல்லது நெல்லோ, விளைந்தபிறகு, அதை அப்படியே நாம் விதையாக பயன்படுத்த முடியாது; பண்படுத்தப்பட்ட பிறகே, அவை பிரயோசனமுள்ள விதைகளாக மாறுகின்றன. அது போலத்தான், இந்தப் பூமியிலே நமது ஆத்துமாவும்; தேவ வசனங்களினாலே பண்படுத்தப்பட்டு, தேவ ஆவியிலே வளர்ந்து, அது பரலோகத்தின் விதையாக உருவாகின்றது.

பூமியில் விளைந்திடும் பலனை (உணவை) எல்லோருமே பயன்படுத்துகின்றோம். அதில் திருடரும், விபசாரக்காரமுண்டு. தேவன் இந்த பூமி தமது என்றும், அதிலுள்ள பொருட்களும், ஜனங்களும் (ஆத்துமாக்கள்), தம்முடைய கரங்களின் கிரியைகள் என்றும் தெளிவுப்படுத்தியுள்ளார். அவரது பூமியின் பலன்களை பயன்படுத்தி வளரும் நமது மண்ணான சரீரத்தில்தான், பரலோகத்தின் விதையான ஆத்துமா விதைக்கப்பட்டிருக்கின்றது.

மனுஷனுக்குள் வாழும் ஆத்துமா, தேவனாகிய கர்த்தரை தந்தையாக ஏற்றுக்கொள்ளும் பொழுது, அவர் வாழும் பரலோகத்திலே அது நல்ல விதையாக விதைக்கப்படுகிறது. இல்லையென்றால், அது களையாக (பதராக) இந்த உலகைவிட்டு செல்லுகிறது. அப்படிப்பட்ட பலன் தராத களைகளெல்லாம் எரிநரகத்திலே போடப்படும். “மாம்சத்திலே பிறப்பது மாம்சமாயிருக்கும்; ஆவியிலே பிறப்பது ஆவியாயிருக்கும்”, என்று நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவானவர் கூறியிருக்கிறார். பாருங்கள், நாம் ஒவ்வொருவரும் இந்த பூமியிலே மறுபடியும் பிறக்கும் அநுபவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்; அதாவது பரலோகத்தின் விதையாக மாறவேண்டும்.

**அதற்குத்தேவையானது:**

**தேவ சாயலும், தேவ ரூபமும்**

இந்த இரண்டையும், ஒரு ஆத்துமா இந்த உலகிலே பெற்றுக்கொள்ளும்போது, தேவன் தாம் வாழும் அந்த உன்னத இடத்தில், அது நித்திய காலமாக வாழ்வதற்கு இடமளிக்கிறார். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு", என்று நமது கர்த்தர் உறுதியளித்திருக்கின்றார். அப்படியென்றால், நிச்சயமாக தேவன் நாம் ஒவ்வொருவரும், அவரது பிள்ளையாக வேண்டும் என்று விரும்புகின்றார். தேவ வசனங்களைப் பெற்றவர்கள் தேவனுக்குப்பிள்ளைகளாகிறார்கள். ஆகையால் தேவனிடமிருந்து நமக்கு கிடைத்திருக்கும் ஞானமாகிய அவரது வார்த்தைகளை அன்றாடம் கற்று, தியானித்து, நமது ஆத்துமாவிலே உருவாகும் குணங்களுக்கு, ஆதாரமாக அவைகளைப்பயன்படுத்த வேண்டும்.

தேவ ஞானத்திலே வளராத ஆத்துமா, இந்த உலக அறிவைத்தேடுகிறது. உலக அறிவு பெறுத்தவன் நோவு பெறுத்தவன் என்று வேதம் சொல்கின்றது. அப்படிப்பட்ட ஆத்துமா, களையாக வளருகின்றது. இதன் அர்த்தம் படிப்பது தவறு என்பதல்ல. படித்த படிப்பினால் வந்த அறிவைக்கொண்டு, நம்மை உருவாக்கிய தேவனை அறிந்து கொள்ள முயற்சிப்பதுதான் தவறு என்று வேதம் போதிக்கின்றது. தூற்றுக்கூடை, இயேசுவின் கரங்களிலுள்ளது. எல்லா ஆத்துமாக்களும் முடிவிலே, களத்திற்கு வந்துதான் தீர வேண்டும். களம் என்பது தேவனின் நியாயத்தீர்ப்பைக்குறிக்கின்றது.

என்றென்றும் வாழக்கூடிய சரீரத்திலே, முதல் மனுஷனும், அவனது மனைவியும் உருவாகியும், அவர்களது கீழ்ப்படியாமையினாலே, சரீர மரணத்தை சாபமாக பெற்றுக்கொண்டார்கள். அதனால், இன்று நாமெல்லாரும் அந்த சாபத்திற்கு சொந்தக்காரர்களாக இந்த பூமியிலே பிறக்கின்றோம்.

எதனால்?

நமது சரீரம், இந்த முதல் மனுஷனின் மூலமாய் வந்ததினால்தான். அவர்களது கீழ்ப்படியாமை நமக்கு சரீர மரணத்தைதான் கொண்டு வந்திருக்கின்றது. ஆனால்? நமது கீழ்படியாமையோ, ஆத்தும மரணத்தை கொண்டு வருமென்பதை நாம் உணர வேண்டும். தேவனது தூற்றுக்கூடையிலே, கோதுமை மணிகளுமுள்ளது, பதருமுள்ளது. ஆவியானவர் சுத்தமான காற்றாய் வீசும்போது, அலைக்கழிக்கப்பட்டு ஓடும் அசுத்தமானவர்களே, அந்த பதருகள்; அக்கினி தழலாக எழும்புபவர்களோ, அவரது பிள்ளைகள், அவர்களே அந்த கோதுமை மணிகள். களத்திற்கு வந்தாலும், தூற்றுக்கூடையிலே எடுக்கபட்டாலும் கூட, நல்ல விதையாக இல்லாவிட்டால், நாம் காற்றிலே பறக்கும் பதராகத்தான் இருப்போம். அப்படிப்பட்ட பதரெல்லாம் கூட்டிச்சேர்க்கப்பட்டு அக்கினியிலே சதாகாலமும் வாதிக்கப்படும். அங்கே அழுகையும், பற்கடிப்பும் நிறைந்திருக்கும் என்று வேதம் சொல்கின்றது.

**எப்படிப்பட்ட நிலமாக நமது இருதயம் உள்ளது; வேதத்தின் அடிப்படையிலான ஒரு விளக்கத்தை கற்றுக்கொள்வோம்.**

### மத்தேயு 13:3-8;18-23

ஆத்துமாவை பரலோகத்தின் விதையென்றுப்பார்த்தோம். இருதயம் நிலமென்றும் அறிந்து கொண்டோம். ஆனால், இயற்கையிலே, இந்த நிலம் தரிசாக கிடக்கின்றது; சில வழிப்பாதைகளாகவும், சில கற்பாறைகளாகவும், சில முள்ளுள்ள இடமாகவும், சில நல்ல நிலங்களாகவுமுள்ளது. ஒரு ஆத்துமா தேவ வசனங்களாலே நிரப்பபடும்போதுதான் அது பரலோகத்தின் விதையாகின்றது. தேவ வசனம் விதைக்கப்படும் நமது இருதயம், எந்த வகையைச்சேர்ந்ததாக உள்ளது. சற்று நிதானித்துப்பார்ப்போம்.

### 1. வழியருகே விழுந்த விதை

இந்த வகை இருதயம் உணர்வில்லாதது; தேவ வசனங்களை கேட்டாலும், அது தேவனுடைய இராஜ்ஜியத்தைக்குறித்து அறிந்து கொள்ள முயற்சி எடுக்காததால், சத்துரு வந்து கேட்ட வசனங்கள் பிரயோசனப்படாதபடிக்கு, இருதயத்தை கெடுத்துப்போடுகிறான்.

### 2. கற்பாறையில் விழுந்த விதை

இந்த வகை இருதயம், தேவ வசனத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளும்; ஆனால் சத்துருவோடு போராடி ஜெயம்பெற விரும்பாது. சத்தியத்தில் நிலைநிற்க தயங்கும்; துன்பம், துயரம் என்று வரும்பொழுது, தேவனை குறை சொல்ல முயற்சிக்கும்.

### 3. முள்ளுள்ள இடத்தில் விழுந்த விதை

இந்த வகை இருதயம், வசனத்தை கேட்கும்; ஆனால் உலக ஆசைகளான ஐசுவரியம், சிற்றின்பங்கள், நெருக்குகையில், ஆவியில் நிலை நிற்காமல், மாம்சத்தின் கிரியைகளை வெளிப்படுத்தும்.

## 4. நல்ல நிலத்தில் விழுந்த விதை

இந்த வகை இருதயம், வசனத்தை கேட்டு, உணர்வடைந்து, உபவாசத்திலும், ஜெபத்திலும், தரித்திருந்து, தம்மிடமிருக்கும் ஆத்துமா பரலோகத்தின் விதையாகயாக உருமாற கர்த்தருக்கு உதவும். மாத்திரமல்ல, வேறு பல ஆத்துமாக்களையும், தேவனது இராஜ்ஜியத்திற்கென்று ஆதாயம் செய்யும்.

அன்பான தேவ பிள்ளைகளே!

நமது இருதயம் எப்படிப்பட்ட இடமாக உள்ளது. தேவனது தூற்றுக்கூடையிலே நாம் கோதுமை மணியா அல்லது பதரா?



நல்ல விதையாக வளர தேவ வசனத்தை நாடுவோம்; பரிசுத்த ஆவியில் வளருவோம்; தேவ பிள்ளைகளாக கடந்து போவோம்.

அல்லேலுயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்